# சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகள்

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது, சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியின் நெருக்கடியான நிதியியல் நிலைமை, வைப்பாளர்களது வைப்புக்களை கேள்வி அல்லது முதிர்ச்சியில் மீள்செலுத்தாமை மற்றும் இலங்கை மத்திய வங்கியினால் விதிக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கு தொடர்ச்சியான ஒருங்கிணையாமை என்பனவற்றை கருத்திற்கொண்டு 2011ஆம் ஆண்டு 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் (நிதித்தொழில் சட்டம்) கீழ் நிதித்தொழிலை நடாத்துவதற்கு சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியிற்கு வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்வதற்கான முன்னறிவித்தலை நிதித்தொழில் சட்டத்தின் 37(1)ஆம் பிரிவின் கீழ் வழங்கியது.

எவ்வாறாயினும் இது, நிதித் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக வழங்கப்பட்ட அனுமதியை இரத்துச் செய்வதற்கான முன்னறிவித்தல் மாத்திரமே என்பதனை இலங்கை மத்திய வங்கி வலியுறுத்த விரும்புகிறது. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியிற்கு வழங்கப்பட்ட அனுமதி இரத்துச் செய்யப்படக்கூடாது என்பதற்கான காரணங்களை அறிவித்து, அனுமதியை இரத்துச் செய்வதற்கான முன்னறிவித்தலிற்கான தனது எழுத்து மூல ஆட்சேபனையை, நிதித்தொழில் சட்டத்தில் விதிக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் சமர்ப்பிப்பதற்கான வாய்ப்பு, சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியிற்கு காணப்படுகிறது. இதற்கமைய, சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி நாணயச் சபைக்கு தனது ஆட்சேபனையை சமர்ப்பித்துள்ளது. நிதித்தொழில் சட்டத்தின் விதிகளின் படி, நாணயச் சபையானது சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியினால் தரப்பட்ட ஆட்சேபனைகளைக் கருத்திற்கொண்டு அனுமதியினை இரத்துச் செய்வதற்கான முன்னறிவித்தலை மீளப்பெறுவதா அல்லது அனுமதியினை இரத்துச் செய்வதா என்பது தொடர்பாக தீர்மானிக்கும். மேலும், சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட மூலதன அதிகரித்தல் திட்டம், இலங்கை மத்திய வங்கியினால் கருத்திற்கொள்ளப்படுகிறது. வைப்பாளர்கள் தமது மேலதிக விபரங்களுக்கு **011 2398806** அல்லது **011 2398774** எனும் தொலைபேசி இலக்கங்களுடாகவோ அல்லது **snbfi_querysinf@cbsl.lk** எனும் மின்னஞ்சல் ஊடாகவோ வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

**பணிப்பாளர் - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**
இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01